செ.வெ.எண்: 48 நாள்:19.11.2021

# பத்திரிக்கை செய்தி

## நாகப்பட்டினம் மாவட்டத்தில் அனைத்து வீடுகளுக்கு 40 சதவீதம் மானியத்தில் சூரிய மின் சக்தி சாதனம் அமைக்கும் திட்டம்

நாகப்பட்டினம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையின் மூலம் மரபுசாரா எரிசக்தியினை மேம்படுத்தும் திட்டங்கள் மாவட்டம் முழுவதும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தற்பொழுது அனைத்து தனிவீடுகள் மற்றும் அடுக்குமாடி குடியிருப்புகளுக்கும் சூரிய மின்சக்தி உற்பத்தி செய்யும் சாதனம் (Grid Connected Roof Top Solar System) வீடுகளின் மேற்கூரையில் நிறுவுவதற்கு அரசு நிர்ணயித்த தொகையிலிருந்து 40% சதவீத மானியம் அரசு அறிவித்துள்ளது. இவ்வாறு அமைக்கப்படும் சூரிய ஒளி மின்சாதனம் மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரமானது, அமைப்பவர்கள் உபயோகித்தது போக, மீதமுள்ள மின்சாரமானது மின்வாரியத்திற்கு நிகர அளவி (Net Meter) மூலம் அனுப்பப்படுவதால் மின்கட்டணம் செலுத்துவது முற்றிலும் குறைக்கப்படுகிறது. மேலும், அதிகமான மின் கட்டனம் செலுத்தும் குடும்பதாரர்கள் இத்திட்டத்தின் மூலம் சூரிய மின்சக்தி சாதனம் அமைத்து தங்களுடைய மின் செலவினங்களை குறைத்து பயனடைந்து கொள்ளலாம் என்று தெரிவித்து கொள்ளப்படுகிறது.

இத்திட்டத்தின் அடிப்படையில் கீழே கொடுக்கப்பட்டுள்ள விவரத்தின் படி, ஒரு பயனாளி தங்களுடைய மின்சார உபயோக தேவைக்கேற்ப 1 கிலோவாட் முதல் 500 கிலோவாட் வரை பயன்பெறலாம். இம்மானியம் பெறுவதற்கு மின்வாரிய மின் இணைப்புள்ள அனைத்து தனிவீடுகள் மற்றும் அடுக்குமாடி குடியிருப்புகள் ஆகியவை தகுதியானது ஆகும்.

1. **அரசு நிர்ணயித்த தொகை பட்டியல்:**

| Capacity(Kw) | 1Kw | 1 to 2Kw | 2 to 3Kw | 3to10Kw | 10 to 100Kw | 100 to 500Kw |
|---|---|---|---|---|---|---|
| Price (Rs) | 41,470 | 40,470 | 39,970 | 39,770 | 36,170 | 34,849 |

2. **சூரிய மின்சக்தி சாதனம் அரசு மானிய விவரப்பட்டியல்:**

| வ.எண் | சூரிய மின்சக்தி திறன் அளவு | அரசு மானியம் |
|---|---|---|
| 1 | 1 to 3 kw | 40% |
| 2 | 3 to 10kw | 1 முதல் 3 kw க்கு 40%: மீதமுள்ள kw க்கு 20% |
| 3 | 10 kw மேல் | 1 முதல் 3 kw க்கு 40%: மற்றும் 4 முதல் 7 kw வரை 20% |
| 4 | 1 to 500 kw குழு வீட்டு வசதி சங்கங்கள் மற்றும் குடியிருப்பு நல சங்கங்கள் . | 20% |

இத்திட்டத்தின்கீழ் பயன்பெற விரும்பும் பயனாளிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ள TANGEDCO ONLINE LINK: https://www.tnebltd.gov.in/usrp/apply.xhtml ல் நேரடியாக பதிவு செய்து கொள்ளலாம்.

மேலும் விவரங்களுக்கு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையில் உள்ள TEDA உதவி பொறியாளரை நேரடியாகவும் அல்லது 9385290522, என்ற அலைபேசி வழியாகவும் அல்லது ngp@teda.in என்ற மின்னஞ்சல் மூலமாகவும் சூரிய மின்சக்தி ஆற்றல் உற்பத்தி மற்றும் மானியம் தொடர்பான அனைத்து தகவல்களையும் பெற்றுக்கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்களால் தெரிவிக்கப்படுகிறது.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**